# பெரியமேடு பகுதியில் 7 ஆண்டுகளுக்கு பின்னர் இரு வழியில் போக்குவரத்து தொடக்கம்

சென்னை, ஏப். 13: மெட்ரோ ரயில் பணியின் காரணமாக பெரியமேடு பகுதியில் 7 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்ட போக்குவரத்து, சனிக்கிழமை முதல் மீண்டும் இரு வழியில் தொடங்கப்பட்டது.

இது குறித்து சென்னை பெருநகர காவல் துறையின் போக்குவரத்து பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மெட்ரோ ரயில் பணியின் காரணமாக கடந்த 2012-ஆம் ஆண்டு செப்டம்பர் 16-ஆம் தேதி பெரியமேடு ராஜா சர் முத்தையா சாலையில், பூந்தமல்லி நெடுஞ்சாலை சந்திப்பில் இருந்து பெரியமேடு மசூதி சந்திப்பு வரை ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டது. இதனால் பெரியமேடு மசூதி சந்திப்பில் இருந்து பூந்தமல்லி சாலை நோக்கி வரும் வாகனங்கள் அல்லிக்குளம் சாலை வழியாக சென்ட்ரல் ரயில் நிலையம் நோக்கி திருப்பிவிடப்பட்டன.

தற்போது மெட்ரோ ரயில் நிலையப் பணி நிறைவடைந்துவிட்டதால், இந்தப் பாதை 7 ஆண்டுகளுக்குப் பின்னர் இரு வழிப்பாதையாக சனிக்கிழமை மாற்றப்பட்டது. அதே வேளையில் அல்லிக்குளம் சாலையில் பூந்தமல்லி நெடுஞ்சாலை சந்திப்பில் மெட்ரோ ரயில் பணி நடைபெற்று வருவதால், அந்தப் பகுதியில் மட்டும் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.